# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශේෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 40/7 — 1973 ජනවාරි 03 වැනි බදාදා — 1973.01.03

40/7 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 03 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II — சட்டசம்பந்தமானது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]

### உச்சமன்ற குற்ற விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

#### பிரகடனம்

ஸ்ரீ லங்கா குடியரசுவின் கௌரவ உயர்தர நீதிமன்றம், சிலாபம், புத்தளம் நீதிமன்றத்துக்கென நடாத்தும் கிறிமினல் வழக்கு விசாரணை நீர்கொழும்பில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1973 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் திகதி காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமூகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.

பிசுக்கால் கந்தோர்,
குருநாகல்,
1972 ம் ஆம் டிசம்பர் மீ 29 ந் உ.
1-321

ஆர். கே. சந்திரானந்த த சில்வா,
வடமேல் மாகாண பிசுக்கால்.